# வெளிநாடுகளில் கிடைக்கும்...

20ஆம் பக்கத் தொடர்ச்சி...

வருடங்கள் கழித்து பயிற்சி தந்தால் அதற்கு சிறிது கால தாமதம் பிடிக்கும் என்றார் அவர். இந்த 30 வருடங்களில் 1,000 முறைக்கு மேல் நாய்களிடம் கடி வாங்கி இருப்பதாகவும், அதையும் மீறி தொழில் மேல் கொண்டப் பற்றினால் தொடர்ந்து இத்தொழிலை செய்து வருவதாகவும் ஸ்டீவன் தெரிவித்தார்.

நாய்களுக்கு பயிற்சி அளிப்பதோடு, பயிற்சியாளர்களையும் உருவாக்கி வரும் ஸ்டீவன், மேலும் கூறுகையில் தற்போது அதிகமான போலி பயிற்சியாளர்கள் உருவாகி இருப்பதாகவும், அவர்களை பொறுத்த வரையில் நாய்களுக்கு பயிற்சி வழங்குவது என்றால் உட்கார் என்றால் உட்கார வேண்டும். எழுந்திரு என்றால் எழுந்திருக்க வேண்டும் அவ்வளவு தான். ஆனால் நாய்களுக்கு வழங்கப்படும் பயிற்சி என்பது அதுவல்ல. நாம் சொல்வதை அது புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். பல பயிற்சிகள் இருக்கின்றன. நாயின்